www.agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

# தேசிய வெளிக்கள நிலையம் தொண்டைமானாறு
## நான்காம் தவணைப் பரீட்சை - 2023
# National Field Work Centre, Thondaimanaru.
NFWC
## 4st Term Examination - 2023

| | | | | |
|---|---|---|---|---|
| தொடர்பாடலும் ஊடகக் கற்கையும் Communication & Media Studies | Three Hours / Gr -13 (2023) | 29 | T | I |

### பகுதி I

**01)** தொடர்பாடலானது ஓரிடத்தில் தொடங்கி இன்னோர் இடத்தில் முடியாது, தொடர்ச்சியாக நிகழும் செயற்பாடு எனும் கருத்தியலை முன்வைத்த அறிஞர்கள் பின்வருவோரில்
1) வொரன் வீவர் மற்றும் குளோட் ஷனன் 2. அரிஸ்டோட்டில் மற்றும் லாஸ்வெல்
3) ஷ்ராம் மற்றும் ஒஸ்குட் 4. லாஸ்வெல் மற்றும் டேவிட் கே. பெர்லோ
5) அரிஸ்டோட்டில் மற்றும் ஒஸ்குட்

**02)** தொடர்பாடல் பற்றிய பொறியியல் மாதிரியினால் முதன்முதலில் அறிமுகப்படுத்தப்பட்ட அம்சம்
1) செய்தி 2) இடையூறு 3) செல்வழி 4) மூலம் 5) பின்னூட்டல்

**03)** டேவிட். கே. பெர்லோவின் மாதிரி பற்றிய பின்வரும் கூற்றுக்களில் சரியானது,
1) ஊடகத்தையும் தொடர்பாடல் பாதையையும் அலட்சியப்படுத்துகின்றது.
2) கணிதரீதியிலான இயல்புகளினைக் கொண்டது.
3) தொடர்பாடலின் இடையூறுகள் தாக்கம் கொண்டது.
4) தொடர்பாடலின் நேர்வழித்தன்மையைக் குறிக்கும்.
5) பாதிப்பு குறித்து அதீத கவனம் செலுத்துகின்றது.

**04)** எந்தவொரு தொடர்பாடல் நிலைமையிலும் அத்திய அவசியமாகக் காணப்படும் கூறு,
1) திட்டமிடல் 2) தகவலின் செம்மை 3) பெறுநரின் பின்னூட்டல்
4) பொருத்தமான ஊடகப் பயன்பாடு 5) தகவல் பரிமாற்றம்

**05)** பூகோளப்பண்பாடு எனும் கருத்தினை அறிமுகப்படுத்தியவர்,
1) றொபேர்ட்சன் 2) ஜோன் மக்லீன் 3) மலினோவஸ்கி
4) டேவிட் வைட் 5) வோல்ற்றர் பென்ஜமின்

**06)** மெய்நிகர்த் தொடர்பாடலின் சிறப்பம்சங்களில் பொருத்தமல்லாதது,
1) பாதுகாப்பானது 2) திறமையாக தொடர்பாடலில் ஈடுபடும் ஆற்றல்.
3) குறைந்த செலவு 4) இடவசதி தேவை
5) ஒரே தடவையில் பலருடனும் தொடர்பாடலில் ஈடுபடக்கூடிய ஆற்றல்

**07)** செய்திப்பத்திரிகை ஒன்றில் மொழிப்பயன்பாடு குறித்த இயல்புகளில் பொருத்தமற்றது,
1) எளிமையான மொழி வடிவம்
2) இலக்கு குழுக்களுக்குப் பொருத்தமான வகையில் எழுதுதல்
3) உயரிய மொழிவடிவம்
4) மரபு சார்ந்த முறைகளிலிருந்து வேறுபட்டிருத்தல்
5) எழுதும் பாணிகளுக்கு ஏற்றவிதத்தில் மொழியின் வடிவத்தினை மாற்றமுடியும்

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!


agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

Agaram.LK - Keep your dreams alive!

**08)** A ⟶ B ⟶ C ⟶ D ⟶ தாக்கம்

மேற்குறிப்பிட்ட மாதிரியில் ABCD குறிப்பது முறையே,

1) அனுப்புனர், ஊடகம், பெறுநர், தகவல்
2) அனுப்புனர், தகவல், ஊடகம், ஊடுகடத்தி
3) யார், யாருக்கு, என்ன விடயம், எந்த ஊடகம்
4) யார், என்ன விடயம், எந்த ஊடகம், யாருக்கு
5) தகவல், மூலாதாரம், ஊடுகடத்தி, தடை

**09)** பின்வரும் கூற்றுக்களில் தொடர்பாடல் தொடர்பான மிகத்தவறான கூற்றினை தெரிவு செய்க,

1) தொடர்பாடல் என்பது குறியீடுகளை பரிமாறிக்கொள்ளும் வழிமுறையாகும்
2) தொடர்பாடலின் முக்கிய நோக்கம் ஒரு பாதிப்பை உருவாக்குவதாகும்.
3) தொடர்பாடல் வழிமுறையில் அனைத்துச் செய்திகளும் தகவல்களை வழங்குகின்றன
4) பெறுநர் இல்லாமல் ஒரு தொடர்பாடல் இருக்கமுடியாது.
5) தொடர்பாடல் வழிமுறையில் தொடர்பாடுநரினதும், பெறுநரினதும் வகிபாகங்கள் நிலைத்த தன்மை கொண்டவை.

**10)** பாடசாலையில் நடைபெற்ற முத்தமிழ் விழாவில் இடம்பெற்ற மேடைநிகழ்ச்சியில் நாடக அளிக்கையும் இடம்பெற்றது. இதில் இடம்பெறக்கூடிய தொடர்பாடல் வடிவங்களாக அமைவன,

1) வாய்மொழி, வாய்மொழிசாரா, செவிப்புல, கட்புலத்தொடர்பாடல்
2) சொல்சார், சொல்சாரா, கட்புல, முறைசார் தொடர்பாடல்
3) முறைசார், சொல்சார், கட்புல, செவிப்புல தொடர்பாடல்
4) கட்புல, எழுத்துமூல, முறைசாரா, செவிப்புல தொடர்பாடல்
5) முறைசார், எழுத்துமூல, கட்புல, செவிப்புலத் தொடர்பாடல்

**11)** குறித்தவொரு பால்மா கம்பனியின் உற்பத்திப் பொருட்கள் கதிரியக்கச் சோதனைக்கு உட்படுத்திய போது மூன்றாவது தடவையாகவும் தோல்வியடைந்து விட்டதாக அரசுதரச் சோதனை நிறுவனம் அறிவிப்பு ஒன்றை விடுத்தது. குறித்த கம்பனியின் பொதுசனத் தொடர்பு அதிகாரியாக நீங்கள் இருந்தால் உங்களது உடனடி நடவடிக்கையாக அமையக்கூடியது பின்வருவனவற்றுள்,

1) வணிக நீதிமன்றத்தில் கதிரியக்க சோதனைக்கு எதிராக வழக்குத் தாக்கல் ஒன்றை மேற்கொள்ளல்.
2) அரச தரச்சோதனை நிறுவனத்துக்கு எதிராக நுகர்வோரின் எதிர்ப்பு போராட்டம் ஒன்றினை ஒழுங்குபடுத்தல்.
3) சந்தையிலிருந்து சம்பந்தப்பட்ட பொருட்களை வாபஸ் பெற்று அதனை வெகுசன ஊடகங்கள் வவழியாக அறிவித்தல்.
4) சோதனை முடிவுகள் தவறானவையெனச் சுட்டிக்காட்டும் ஊடக அறிக்கையொன்றினை விடுத்தல்
5) குறித்த பால்மா பொருட்களை வேறு குறியீட்டுப் பெயரின் கீழ் சந்தைக்கு மீள விநியோகித்தல்.

**12)** ஊடக விளங்கறிவு கொண்ட ஒருவரிடமிருந்து எதிர்பார்க்கப்படுவது,

1) எழுத்துக் காட்சி ஒலிமூலமாக வரும் தகவல்களினை வழங்குதல்
2) ஊடகங்கள் வழியாக பெறப்படும் தகவல்களை உள்வாங்கலும் பகுப்பாய்வு செய்தலும் மற்றும் மமதிபபிடுவதுக்குமான ஆற்றல்
3) எழுத்து மற்றும் அச்சுப்பதிக்கப்பட்ட ஊடக உள்ளடக்கத்தினை வாசித்தலும் புரிந்து கொள்ளலும்.
4) வெகுசன ஊடகங்கள் வழியாக பெறப்படும் தகவல்களை புரிந்து கொள்ளல்.
5) அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகத்திலிருந்து வரும் தகவல்களினைப் பெற்றுக்கொள்ளல்.

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

Agaram.LK - Keep your dreams alive!

**13)** பொது மக்கள் தொடர்புச் செயன்முறையுடன் இணைந்திராத பண்புகளில் ஒன்று,
1) பொது மக்கள் மத்தியில் நல்லெண்ணத்தினை தக்கவைப்பது.
2) சமூக ஏற்புடமையைப் பெற்றுக்கொள்வதற்கான ஒரு தொடர்பாடல்.
3) வணிக அடிப்படையிலான இலக்குகள் மற்றும் குறிக்கோள்களினை கடந்து நிற்பது.
4) விளம்பர அணுகுமுறையிலிருந்து வேறுபட்டது.
5) துரித ஆதாயங்களைப் பெற்றுக்கொள்வதற்கான ஒரு குறுகிய காலச் செய்முறை.

**14)** சமூகமொன்றில் பிரசித்த பண்பாட்டிற்கும் நுகர்வுக்கோலத்திற்குமான மனப்பாங்கிற்கும் அதிகம் பங்களிப்புச் செய்யும் ஊடகம்,
1) அச்சூடகம் 2) வானொலி 3) இணையம் 4) சமூக ஊடகங்கள் 5) தொலைக்காட்சி

**15)** படைப்பாக்கத் தொடர்பாடலுக்கு உரித்துடைய செயற்பாடு அல்லாதது,
1) சமூகமயமாக்கத்தை உருவாக்குதல்
2) அறிவுசார் ஞானத்தினை உருவாக்குதல்
3) மகிழ்ச்சியைத் தருதல்
4) தரவுப் பகுப்பாய்வு
5) கருத்துக்களை பரிமாற்றுதல்

**16)** இன்றைய எமது வாழ்வில் புதிய ஊடகம் தன் மேலாதிக்கத்தை எடுத்துக் கொண்டுள்ளதாக காலைக்கூட்டத்தில் உரையாற்றிய ஆசிரியர் ஒருவரினால் மாணவர்களுக்கு எடுத்துக்கூறப்பட்டது. மேற்படி கூற்றுக்கு மிகத்தொடர்பான ஒன்றாக அமைவது,
1) புதிய ஊடக பயன்பாட்டினால் தனியாட்கள் தனிமைப்படுத்தப்படுகின்றார்கள்.
2) புதிய ஊடகத் தொழில்நுட்பத்தின் வேகமான பரவுகை.
2) புதிய ஊடகப் பயன்பாட்டினால் வன்முறைகள் அதிகரிக்கின்றன.
4) புதிய ஊடகத்தினை பயன்படுத்துவதற்கான செலவு குறைவாக காணப்படுகின்றமை.
5) புதிய ஊடகம் பற்றிய விளங்கறிவு அதிகரித்திருப்பதால் இவ்வாறான விடயம் நடைபெறுகின்றது.

**17)** வகுப்பறையில் ஊடகப்பண்பாடு பற்றி கலந்துரையாடப்பட்ட சில விடயங்கள் கீழே தரப்பட்டுள்ளன.
A- ஊடகத்தொழினுட்பத்துடன் இணைச்சேர்க்கையானது.
B- இது மேலைத்தேயப் பண்பாட்டின் அடிப்படையானது.
C- சமூக இயங்கியலுக்கு அமைவாக ஒழுங்குபடுத்தப்பட்டது.
D- இயற்கையான ஒரு செயன்முறை என்பதனை விட இது திட்டமிடப்பட்ட ஒரு செயன்முறையாகும்.

மேற்குறித்த கூற்றுக்களில் உண்மையானவை,
1) A, B மாத்திரம் 2) C, D மாத்திரம் 3) A, C மாத்திரம்
4) A, B, D மாத்திரம் 5) A, B, C, D யாவும்

**18)** நாட்டார் பாடல்களின் முக்கியத்துவம் தொடர்பாக பின்வருவோரினால் முன்வைக்கப்பட்ட கருத்துக்கள் வருமாறு,
கதிர் - இது சமூகப் பிரச்சினைகளையும் முரண்பாடுகளையும் வெளிப்படுத்தும் களமாக திகழ்கின்றது.
விது - நாட்டார் பாடல்கள் சமூகமயமாக்கற் செயற்பாட்டிற்கு உதவுகின்றது.
கரன் - தமது வழக்காறு மற்றும் நம்பிக்கைகளை வெளிப்படுத்த இது உதவுகின்றது.
ககிரி - நாட்டார் பாடல்களின் மூலம் ஒத்த / நேர் தன்மையான கருத்துக்களை மாத்திரமே சமூகத்துடன் பரிமாற்றிக் கொள்கின்றது.

மேற்குறித்த கூற்றுக்களில் தவறானவை,
1) கதிர் மற்றும் விதுவினது கூற்றுக்கள்.
2) கதிர், விது, கரனினது கூற்றுக்கள்.
3) கரன், கிரியினது கூற்றுக்கள்.
4) கிரி மட்டும்.
5) கரன் மட்டும்.

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

**19)** படைப்பாக்கச் செய்தியில் காணக்கிடைக்கக்கூடிய அதிமுக்கியமான விடயமாக கொள்ளத்தக்கது,
1) அளிக்கை செய்யும் தன்மை. 2) உண்மைத் தன்மை 3) பல வண்ண இயல்பு
4) xyp - காட்சி இயல்பு 5) அனுமானிக்கும் தன்மை

**20)** பெறுநர் பற்றிய கூற்றுக்களில் மிகப் பொருத்தமானது,
1) இரு நபர்கள் இல்லாத பட்சத்தில் பெறுநர் காணப்பட மாட்டார்.
2) பெறுநரின் வகிபங்கு மாற்றப்படாது.
3) பெறுநரின் விளங்கறிவு சமனாக இருக்கமாட்டாது.
4) வியாக்கியானம் செய்யக்கூடிய திறன்களைப் பெறுநர் எப்போதும் கொண்டிருப்பார்.
5) பெறுநரின் இரசனைப் பகுதி பரந்திருக்கக் காணப்படும்.

**21)** பிரசித்த பண்பாடு பற்றிய பின்வரும் கூற்றுக்களில் பொருத்தமற்றது,
1) நீண்டகாலத்திற்கு மாற்றமின்றி நிலைத்திருக்கக்கூடியது.
2) இளைஞர்களையும், சிறுவர்களையும் கவர்ந்திழுக்கக்கூடியது.
3) சமூக நடத்தைகளில் மாற்றத்தினை உருவாக்கக்கூடியது.
4) வணிக நோக்கமுடையது.
5) வெகுசன ஊடகங்களுடன் தொடர்புடையது.

**22)** பின்வரும் சமூக ஊடகங்களில் குறைந்தளவு சொற்களை பயன்படுத்தி குறுஞ்செய்திகளை பரிமாற்றிக் கொள்வதற்குரிய ஊடகம்,
1) லிங்டின் 2) முகநூல் 3) வைபர் 4) பின்ரஸ்ட் 5) ருவிற்றர்

**23)** படைப்பாக்க ரீதியான சிந்தனையில் கிரஹம் வோல்ஸ் என்பவரால் முன்வைக்கப்பட்ட படிமுறைகளில் உள்ளடங்காதது,
1) தயாரித்தல் 2) சரிசெய்தல் 3) ஒலி வெளிப்படுகை 4) அரும்பல் 5) ஒளியூட்டம்

❖ **பின்வரும் அம்சங்களை அடிப்படையாகக் கொண்டு கீழ்வரும் 24 – 28 வரையான வினாக்களுக்கு விடை அளிக்க.**

A - தொடர்பாடுநர்/ குறிமுறையாக்குபவர்
B - செய்தி
C - ஊடகம்
D - தாக்கம்
E - பெறுநர் /குறிமுறையவிழ்ப்பவர்
F - பின்னூட்டம்
G - சூழல்
H - அனுபவக்களம்
I - கடத்தி
J - சேருமிடம்
K - மூலம்
L - தடை
M - பொருட்கோடல்
N - சந்தர்ப்பம்
O – ஊடக விஸ்தீரணம்
P - ஊடகதிரிபு
Q - வியாக்கியானம் செய்தல்

**24)** பின்வரும் விடயங்களுள் தொடர்பாடலின் கூறுகளை மாத்திரம் கொண்ட தொகுதி.பின்வரும் விடயங்களுள் தொடர்பாடலின் கூறுகளை மாத்திரம் கொண்ட தொகுதி,
1) , E, O, L 2) , C, H, LA, C, H, L 3) A, H, O, P 4) D, E, H, P 5) C, K, M, P



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

Agaram.LK - Keep your dreams alive!

**25)** மேற்குறிப்பிட்ட விடயங்களில் இரு வழித் தொடர்பாடல் மாதிரியுடன் மாத்திரம் தொடர்புபடும் அம்சங்கள்.

1) A, B, E, M  2) A, B, C, D  3) A, B, E, L  4) A, B, E, J  5) A, B, E, F

**26)** மேற்குறித்த விடயங்களினை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு ஹரோல்.டீ. லாஸ்வெல்லின் மாதிரியின் தலையாய அம்சத்தினை குறித்து நிற்கும் எழுத்து,

1) A  2) C  3) L  4) E  5) D

**27)** மழைக்காலங்களில் ஏற்பட்ட டெங்கு நோய்த்தொற்று தொடர்பான அறிவிப்பு மக்களை சரிவர சென்றடையவில்லை என்பதனால் நோய்த்தொற்று அதிகமாகக் காணப்பட்டது. இச் சூழலை அடையாளப்படுத்துகின்ற விடயத்தினை குறித்து நிற்கும் எழுத்து,

1) F  2) K  3) L  4) G  5) H

**28)** மேற்குறித்த அம்சங்களிலிருந்து ஷ்ரம் - ஒஸ்குட் மாதிரியைப் புரிந்து கொள்வதற்கு உதவும் பொருத்தமானவற்றைக் குறிப்பது,

1) A, B, E, Q  2) A, B, E, J  3) A, B, E, F  4) A, B, E, I  5) A, B, C, D

**29)** ஒரு கட்புல படைப்பு ஒன்றினை இரசிக்கும் இரசிகர்கள் உள்ளத்தில் பல்வேறு எண்ணங்களினை உருவாக்கும் பொருட்டு கதாப்பாத்திரத்தின் அல்லது பொருளினுடைய நுட்பமான பண்புகள், உணர்வு, வெளிப்பாடு என்பவற்றை வெளிப்படுத்த உதவும் கமரா காட்சி,

1) அண்மை நிலை எடுப்பு close – up
2) நீள் எடுப்பு long shot
3) நெடுந்தொலை எடுப்பு Very long shot
4) இடைநிலை நீள் எடுப்பு Medium long shot
5) இடைநிலை அண்மைக் காட்சி Medium close up

**30)** விமர்சன ரீதியான பெறுநரிடம் காணப்பட வேண்டிய பண்புகளோடு தொடர்புபடாதது,

1) உய்த்தறிதல்  2) செய்தி உருவாக்கம்  3) மதிப்பீடு செய்தல்
4) சாரம்சப்படுத்தல்  5) பகுப்பாய்வு

**31)** பின்வரும் அம்சங்களில் நிறுவனம் ஒன்றின் உள்ளகப் பொதுசனத் தொடர்புத்திட்டத்தோடு தொடர்புடைய அம்சங்களை மாத்திரம் கொண்ட தொகுதி,

1) சுற்றுலா, ஆலோசனைப் பெட்டி, ஊடகமாநாடு, கூட்டங்கள்
2) சுற்றுலா, கலந்துரையாடல்கள், ஊடகமாநாடு, பத்திரிகை
3) கூட்டங்கள், சுற்றுலா, பத்திரிகை, ஊடகக் கலந்துரையாடல்
4) வெளியகத் தொலைபேசி, சுற்றுலா, ஊடகமாநாடு, மின்னஞ்சல்
5) உள்ளகத் தொலைபேசி, கூட்டங்கள், சுற்றுலா, செய்திமடல்

**32)** பாடசாலைகளுக்கிடையிலான காற்பந்து சுற்றுப்போட்டி ஒன்றிற்கு அனுசரனை வழங்கிய காலணி தயாரிக்கும் கம்பனியொன்று அனைத்து விளையாட்டு வீரர்களுக்கும் தாம் தயாரிக்கும் காலணிகளையே அணிய வேண்டுமென ஒரு நிபந்தனை விதித்தது. இது,

1) குறித்த குறியீட்டுச் சின்னமுடைய காலணிகளின் கடினமான காட்சிப்படுத்தல் ஆகும்.
2) தமது குறியீட்டுப்பெயரை ஏனைய பொருட்களுக்கு மத்தியில் நிலைபெறச் செய்வதற்கான முயற்சியாகும்.
3) வேறுவேறான குறியீட்டுச் சின்னமுடைய காலணிகளை அணிந்து விளையாடுவதால் ஏற்படக்கூடிய வித்தியாசத்தை இல்லாமல் செய்வதாகும்.
4) பொருத்தமற்ற காலணிகளை அணிந்து விளையாடுவதால் ஏற்படக்கூடிய விபத்துக்களையும், காயங்களையும் குறைப்பதற்குரிய ஒரு நடவடிக்கையாகும்
5) பாடசாலைக் காற்பந்தினை அபிவிருத்தி செய்யும் ஓர் நடவடிக்கையாகும்

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

**33)** நாட்டாரியல் கற்கையானது வெகுசன ஊடகச் செய்திகளை சிறப்புடையதாக்கும் வகையில் அமைகின்றது. இதன் அனுகூலமாவது,
1) பொழுதுபோக்கினைப் பெற்றுக்கொள்வதற்கு
2) பொதுமக்கள் வாழ்வில் உள்ள நிலைமைகளை கற்றுக்கொள்வதற்கு
3) வரலாற்று நிகழ்வுகளைப் பற்றி அறிந்து கொள்வதற்கு
4) படைப்பாக்க அணுகுமுறைகளை வலுப்படுத்துவதற்கு.
5) மனிததத்துவத்தின் ஆழத்தினை அவதானிப்பதற்கு

**34)** வர்த்தக விளம்பரங்கள் பற்றிய சில கூற்றுக்கள் பின்வரும் மாணவர்களினால் வகுப்பறையில் முன்வைக்கப்பட்டன.
**நவீன்** - நவீன வர்த்தக விளம்பரங்களில் உற்பத்திகள் பற்றிய துறைசார் அடிப்படைத் தகவல்கள் வழங்கப்படும்.
**கவின்** - வர்த்தக விளம்பரங்கள் ஊடகப்பயன்பாட்டுச் செலவினை பெரும்பாலும் குறைத்தலில் தாக்கம் செலுத்தும்.
**மேவின்** - பொருட்கள், சேவைகளின் கொள்வனவில் புத்திசாதுரியமான தீர்மானம் எடுத்தலுக்கு நுகர்வோருக்கு வர்த்தக விளம்பரங்கள் உதவும்.
இவற்றுள் உண்மையான கூற்றினை முன்வைத்தவர்கள் பின்வருவனவற்றுள்,
1) நவீன் மட்டும் 2) கவின் மட்டும் 3) மேவின் மட்டும்
4) நவீன், கவின் மட்டும் 5) அனைவரினது கூற்றுக்களும் உண்மையானது.

**35)** வெகுசன ஊடக வழித் தொடர்பாடலில் அவசியமான கூறாக அமையாதது,
1) வாயிற்காத்தல் செயற்பாடு 2) தொழில்நுட்பக் கருவிகளை பயன்படுத்துல்
3) இருவழித் தொடர்பாடல் 4) பொதுச் செய்திகளின் பரவுகை
5) மேலாளுகையுடனான கட்டமைப்பு

**36)** குறியீடுகள் எனப்படுவன,
1) பேச்சுத்தொடர்பாடலிலிருந்து வேறானவை
2) இன்னுமொன்றைப் பிரதிநிதித்துவப்படுத்தி நிற்பவை.
3) பெரும்பான்மையான மக்களிடம் ஒரே அர்த்தத்தை உருவாக்கும்.
4) மக்களையன்றி, சிந்தனைகளைப் பிரதிநிதித்துவப்படுத்துபவை
5) வாய்மொழியல்லாத் தொடர்பாடலுடன் தொடர்புடையவை.

**37)** கருவியின் உதவியுடனான ஆட்களிடைத் தொடர்பாடல் முறையாக அமைவது,
1) தொலைபேசி 2) ஒலிவாங்கி 3) வானொலி 4) பிரஜைகள் ஊடகம் 5) ஒலிபெருக்கி

**38)** அறிவு, பழக்கவழக்கங்கள், கலைகள், சட்டங்கள், விழுமியங்கள், சம்பிரதாயங்கள் மற்றும் சமூகப்பிராணி என்ற வகையில் ஏனைய ஏதேனும் முறைகளால் மனிதன் பெற்றுக் கொண்டுள்ள பழக்கங்கள் மற்றும் ஆற்றல்கள் அடங்கிய அம்சம் பண்பாடாகும் என வரைவிலக்கணப்படுத்துபவர்,
1) இ.பி ரெய்லர் 2) பி. மலினோவஸ்கி 3) ரல்ப் லிண்டன்
4) மார்க்கஸ் போர்சியஸ் 5) சாமுவெல் பூபெண்டோப்

**39)** சர்வதேச ரீதியில் தொடர்பாடல் கற்கைநெறியினை முதன்முதலில் அறிமுகப்படுத்திய பல்கலைக்கழகம்,
1) தெஹிவளை கனிஸ்ட பல்கலைக்கழகம் 2) பெல்சில்வேனியாப் பல்கலைக்கழகம்
3) சிக்காக்கோ இலினோயிஸ் பல்கலைக்கழகம் 4) உமேயாப் பல்கலைக்கழகம்
5) ஒக்ஸ்போட் பல்கலைக்கழகம்



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

**40)** “வெகுசன ஊடகங்களின் செய்திகள் சிக்கற்தன்மையானவையாகும்.” இவற்றை புரிந்து கொள்ளக்கூடிய திறனும் பொருட்கோடல் செய்துகொள்வதற்கும் பெறுநர் கொண்டிருக்கும் தன்மை,
1) புலக்காட்சி 2) ஆழ்பரிவு 3) உள்ளுணர்வு 4) ஊடகத்திறனாய்வு 5) ஊடக விளங்கறிவு

**41)** பூகோளப்பண்பாட்டின் விருத்தி நிகழத் தொடங்கியது,
1) 20ம் நூற்றாண்டின் இறுதியில் 2) உரோமானிய காலத்தின் இறுதியில்
3) நவீன காலத்தின் தொடக்கத்தில் 4) மத்திய காலத்தின் இறுதியில்
5) புராதன காலத்தின் இறுதியில்

**42)** பின்வரும் அட்டவணையைப் பயன்படுத்தி வினாவுக்கு விடை தருக.

| A | B |
|---|---|
| 1) லிங்டின் | P - புதிய ஊடகத்தின் விருத்தி பெற்ற நிலை |
| 2) ருவிட்டர் | Q - அதன் விரிவாக்கத்திற்கு குவிகை பங்களிக்கிறது |
| 3) சமூக ஊடகம் | R - தொழில்சார் வலையமைப்பிற்கு இது உதவுகிறது |
| 4) புதிய ஊடகம் | S - உத்தியோகபூர்வ செய்திகளை முன்வைக்க இது உதவுகிறது |

1) 1R 2S 3P 4Q 2) 1P 2Q 3R 4S 3) 1Q 2P 3R 4S 4) 1R 2P 3Q 4S 5) 1R 2P 3Q 4S

**43)** அச்சூடகத்தில் மொழியை பயன்படுத்துதல் தொடர்பாக நான்கு மாணவர்களின் கருத்துக்கள் வகுப்பறையில் தெரிவிக்கப்பட்டன.
**கமல்** - படைப்பாக்க பூர்வமான மொழியை பயன்படுத்துதல் வேண்டும்
**நிமல்** - அச்சூடகத்தில் உள்ளடக்கத்தின் தனித்துவப் பண்புகளுக்கு ஏற்ற மொழிப்பாவனை
**சரத்** - வாசகரது குணவியல்புகளுக்கேற்ற மொழிப்பாவனை
**பரத்** - நிபுணத்துவ மொழிப்பாவனையைத் தவிர்த்தல்
மேற்கூறிய கூற்றுக்களில் சரியானது,
1) கமல், நிமல், சரத் 2) நிமல், சரத், பரத் 3) கமல், சரத், பரத்
4) கமல், நிமல், சரத் 5) கமல், நிமல், சரத் மற்றும் பரத்

**44)** பாடசாலையில் உமக்கு வழங்கப்பட்ட ஒப்படைக்கான தகவல்களைப் பெற்றுக்கொள்ள இணையத்தின் ஊடாக டிஜிட்டல் நூலகத்திற்குள் நுழைந்து தேவையானவற்றைப் பெற்றுக்கொள்வீர்கள் எனின், இது பின்வருவனவற்றில்,
1) இடைத்தொடர்பாக்கம் 2) தரவுத்தளம் 3) தானியங்கி
4) வலையமைப்பு 5) அதிவேக செய்தியனுப்புகை

**45)** எதிர்பார்த்த பெறுபேறுகளை முன்வைக்கும்போது வெற்றியினை அடைதல் வினைத்திறனாகும். வினைத்திறனான தகவலில் காணப்படும் பிரதான பண்புகளில் உள்ளடங்காதது,
1) விசேடதன்மை 2) இசைவாக்கம் 3) கட்டமைப்பு 4)திரிபுபடுத்தல் 5)எளிமைத்தன்மை

**46)** பின்வருவனவற்றுள் ஊடக விளங்கறிவை கட்டியெழுப்புவதில் செல்வாக்குச் செலுத்தும் மூன்று சித்தாந்தங்கள்,
1) தனிப்பட்ட அவதானம், மதிப்பீடு, இறையாண்மை
2) திறன்கள், பகுப்பாய்வு, தொகுத்தறிதல்
3) தனிப்பட்ட அவதானம், திறன்கள், அறிவுக்கட்டமைப்பு
4) பகுப்பாய்வு, மதிப்பீடு, சாராம்சம்
5) தொகுப்பாக்குதல், உய்த்தறிதல், குழுவாக்கல்



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

www.agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

**47)** ஊடகப்பண்பாடு தொடர்பான சில கூற்றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

A - பெறுநர்களின் தேவைகள் பற்றி கவனஞ் செலுத்தப்படுகின்றது.

B - சமூகத் தொடர்பியக்கம் தொடர்பில் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

C - தொடர்பாடலின் அனைத்துக் காரணிகளும் உள்ளடக்கப்படுவதில்லை

D - மனிதப்பண்பாட்டின் ஒரு பகுதியாக அமைகின்றது.

ஊடகப்பண்பாடு தொடர்பான உண்மையான விடயங்களாக அமைவன,

1) A, B ஆகியன மாத்திரம் 2) A, B, C மாத்திரம்

3) A, B, D மாத்திரம் 4) B, C, D மாத்திரம்

5) A, B, C, D ஆகிய எல்லாம்

**48)** நாட்டாரியலின் ஓர் கூறான நாட்டார் பாடல்கள் பற்றி மாணவர்களால் முன்வைக்கப்பட்ட சில கூற்றுக்கள் வருமாறு,

ஆதி - தற்கால சமூகம் பற்றிய மீள் மதிப்பீடாக அமையபெறும்

அனு - கலாசாரச் செலுத்துகையின் செயன்முறையாக அமையும்

வசி - புத்திசாதூரியமான சமூகப் பயன்பாடாக அமையும்

சுதா - உருவாக்கியவர் பற்றிய உறுதித்தன்மையை கொண்டது.

தேவி - தற்காலப் பாடல்களை வளப்படுத்துவது

மேற்கூறியவற்றில் சரியானது / சரியானவை,

1) ஆதி, அனு, வசி ஆகியோரது கூற்றுக்கள்.
2) அனு, வசி, சுதா ஆகியோரது கூற்றுக்கள்.
3) ஆதி, அனு, தேவி, சுதா ஆகியோரது கூற்றுக்கள்.
4) ஆதி, வசி, சுதா, தேவி ஆகியோரது கூற்றுக்கள்.
5) ஆதி, அனு, வசி, தேவி, ஆகியோரது கூற்றுக்கள்.

**49)** பிரச்சினை நிகழும் சந்தர்ப்பமொன்றில் ஊடகமாநாடு வழியாக தகவல்களை வெளிப்படுத்துவது ஒரு வெகுசனத் தொடர்புத் தந்திரோபாயமாகும். ஊடகவியலாளர் ஒருவரின் பார்வையில் இது முக்கியமாக அமையக் காரணமாவது,

1) தகவல் பெருமளவில் கிடைக்கும்
2) பெறப்படும் தகவல் பற்றிக் கேள்வியெழுப்பும் சாத்தியம்
3) அதிகாரத்தில் உள்ளவர்களை நேருக்குநேர் சந்திக்கும் வாய்ப்பு
4) குறைந்த நேரத்தில் நிறைவு பெறல்.
5) அனைத்து ஊடகங்களுக்கும் பொருத்தமான வகையில் தகவல் பெறத்தக்கதாக அமைதல்.

**50)** தொடர்பாடல் ஊடகக்கற்கை துறையில் மிக அண்மைய காலத்தில் கலைவடிவமாக அங்கீகரிக்கப்பட்ட ஊடக வழிமுறை,

1) தொலைக்காட்சி ஊடகம் 2) இணைய ஊடகம்

3) சினிமா ஊடகம் 4) சமூக ஊடகம்

5) வானொலி ஊடகம்

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!



agaram.lk

www.agaram.lk

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

NFWC

# தேசிய வெளிக்கள நிலையம் தொண்டைமானாறு
## நான்காம் தவணைப் பரீட்சை - 2023
# National Field Work Centre, Thondaimanaru.
## 4th Term Examination - 2023

| | | | | |
|---|---|---|---|---|
| தொடர்பாடலும் ஊடகக் கற்கையும் - II<br>Communication & Media Studies - II | Three Hours<br>Gr -13 (2023) | 29 | T | II |

## பகுதி II

**அறிவுறுத்தல் :**

❖ **ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக. ஓவ்வொரு வினாவின் விடைக்கும் 40 புள்ளிகள் வழங்கப்படும்.**

*01)*"தொடர்பாடல் ஓர் அடிப்படை மனிதச் செயற்பாடாகும்.

1) தொடர்பாடல் பற்றிய சார்ள்ஸ். H. கூலியின் வரைவிலக்கணத்தை தருக?
2) தொடர்பாடற் செயற்பாட்டின் அடிப்படைக்கூறுகள் நான்கினைக் குறிப்பிட்டு இரண்டினைப் பற்றி விபரிக்குக?
3) தொடர்பாடலின் இயல்புகள் மூன்றினைக் குறிப்பிட்டு விளக்குக?
4) தொடர்பாடல் மூலம் நிறைவேற்றப்படுகின்ற முதன்மையான பணிகள் நான்கினைப் பற்றி விளக்குக? (4+8+12+16= 40 புள்ளிகள்)

*02)*"தொடர்பாடலானது செயற்பாட்டில் ஈடுபடும் நபர்களின் அடிப்படையில் வகைப்படுத்தப்படுவதுடன் பல்வேறுபட்ட வடிவங்களையும் கொண்டுள்ளது.

1) தற்கால நவீன உலகில் ஆளிடைத்தொடர்பாடலுக்காகப் பயன்படுத்தப்படும் நவீன ஊடக வழிமுறைகள் நான்கினைக் குறிப்பிடுக?
2) பாடசாலை ஊடகக்கழகத்தில் குழுத்தொடர்பாடலினைப் பயன்படுத்துவதனால் ஏற்படக்கூடிய அனுகூலங்கள் இரண்டினைக் குறிப்பிட்டு விபரிக்குக?
3) வெகுசனத் தொடர்பாடல் பற்றி அறிஞர்களினால் வரையறுக்கப்பட்ட வரைவிலக்கணம் ஒன்றினைக் குறிப்பிட்டு மேற்குறிப்பிட்ட தொடர்பாடல் வகையின் இயல்புகள் இரண்டினை உதாரணங்களுடன் விளக்குக?
4) முறைசார் தொடர்பாடலுக்கும் முறைசாராத் தொடர்பாடலுக்கும் இடையிலான நான்கு வேறுபாடுகளை விளக்குக? (4+8+12+16= 40 புள்ளிகள்)

*03)*"மக்களின் தொடர்பாடல் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் பல்வேறுபட்ட ஊடகங்கள் செயற்படுகின்றன.

1) யுனெஸ்கோவினால் வெளியிடப்பட்ட "பல குரல்கள் ஒரு உலகம்" அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள வெகுசன ஊடகங்களினால் ஆற்றப்படுகின்ற விசேட பணிகளைக் குறிப்பிடுக?
2) தகவல்களைப் பரிமாற்றம் செய்து கொள்ளப் பயன்படக்கூடிய சமூக ஊடகப்பிரயோகங்கள் (apps) நான்கினைக் குறிப்பிட்டு இரண்டினது செயற்பாடுகள் பற்றி விபரிக்குக.
3) புதிய ஊடகங்களில் காணப்படக்கூடிய பண்புகள் மூன்றினை உதாரணங்களுடன் விளக்குக?
4) சமூக ஊடகங்களின் விளைவால் மனிதனது வாழ்வில் ஏற்பட்டுள்ள சாதக மற்றும் பாதக விளைவுகளை பற்றி செய்திப்பத்திரிகை ஒன்றிற்கு 200 சொற்களுக்கு குறையாது கட்டுரை எழுதுக? (4+8+12+16= 40 புள்ளிகள்)



agaram.lk
Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

*04)*

1) பண்பாடு தொடர்பாக இ.பி.ரெயிலரினால் முன்வைக்கப்பட்டுள்ள வரைவிலக்கணத்தில் உள்ளடங்கும் கூறுகள் நான்கினைப் பெயரிடுக?
2) ஊடகப்பண்பாடு என்பதனால் நீர் விளங்குவதனை வரையறுத்து அதில் மார்ஷல் மக்லூஹனினால் குறிப்பிடப்பட்டுள்ள ஊடகப் பண்பாடு தற்கால உலகில் மேற்கொள்ளும் பணிகள் இரண்டினைப் பற்றி விபரிக்குக?
3) பிரசித்த பண்பாடு சமூகத்தின் வீழ்ச்சிக்கும் கூடக்காரணமாகலாம்.'' இந்தக் கூற்றுக்கு ஆதரவாக மூன்று விடயங்களை அடிப்படையாகக் கொண்டு விளக்குக?
4) பூகோளப்பண்பாடானது தேசியபண்பாட்டின் மீது செல்வாக்குச் செலுத்தும் விதம் தொடர்பாக நான்கு விடயங்களை தொலைக்காட்சி ஊடகத்தினை அடிப்படையாகக் கொண்டு பகுப்பாய்வு செய்க? (4+8+12+16= 40 புள்ளிகள்)

*05)* "ஊடகத்தாக்கங்களிலிருந்து விடுபட ஊடகக்கற்கை அவசியமாகின்றது.''

1) ஊடக விளங்கறிவு மிக்க பயனாளிகள் ஊடக உள்ளடக்கங்கள் தொடர்பாக தமது துலங்கல் வெளிப்பாட்டை முன்வைக்கக்கூடிய வழிமுறைகள் நான்கினைப் பெயரிடுக?
2) உயர் ஊடக விளங்கறிவைப் பெறுவதால் உமக்கு கிடைக்கும் பயன்கள் மூன்றினை குறிப்பிட்டு அவற்றுள் ஒன்றினை பற்றி விபரிக்குக.
3) ஊடகத்திறனாய்வில் பயன்படுத்தப்படக்கூடிய கருத்தியல்கள் மூன்றினை விளக்குக?
4) விமர்சனரீதியிலான பெறுநரிடம் காணப்பட வேண்டிய பண்புகள் நான்கினை விளக்குக?

(4+8+12+16= 40 புள்ளிகள்)

*06)* "படைப்பாக்கம் என்பது புதிது புனைதல் ஆகும்.''

1) லியனார்டோ டாவின்சியினால் குறிப்பிடப்பட்ட படைப்பாக்கத்திற்கான காரணிகள் நான்கினைப் பெயரிடுக?
2) படைப்பாக்கச் செய்தியொன்றை முன்வைப்பது தொடர்பில் கவனிக்கவேண்டிய நான்கு அம்சங்களைக் குறிப்பிட்டு ஒன்றினைப் பற்றி விபரிக்குக?
3) படைப்பாக்கத் தொடர்பாடலில் நாட்டாரியலைப் பயன்படுத்துவதன் முக்கியத்துவத்தை மூன்று அம்சங்களினூடாக உதாரணங்களுடன் விபரிக்குக?
4) அச்சூடகத்தில் மொழியைப் பயன்படுத்தும்போது அவசியம் கவனத்திற் கொள்ள வேண்டிய அம்சங்கள் நான்கினை விளக்குக? (4+8+12+16= 40 புள்ளிகள்)

*07)* "குறித்த நிறுவனமொன்று மக்கள் மத்தியில் தனது நற்தோற்றத்தை நிலைநாட்ட கண்காட்சி ஒன்றினை நடாத்த தீர்மானித்தது.''

1) நிறுவனமொன்றில் பொதுமக்கள் தொடர்புச்செயன்முறையுடன் தொடர்புபடும் பங்குதாரர்களின் நான்கு வகைகளைக் குறிப்பிடுக?
2) வியாபார பொதுசனத் தொடர்பின் வழியாக தனது நற்பெயரை விருத்தி செய்வதற்காக நிறுவனமொன்று பயன்படுத்தும் இரண்டு உபாயங்களை சுருக்கமாக விபரிக்குக?
3) கண்காட்சிக்காக நிகழ்வு முகாமையாளர் ஒருவர் பயன்படுத்தப்படுவாரெனில் அந்நிகழ்வில் அவரது கடமைகள் மூன்றினை விபரிக்குக?
4) மாணவர்கள் தமது கற்றல் செயன்முறையை வெற்றிகரமாக மேற்கொள்வதற்கு ஊடகக்கல்வி வழங்கப்படுவது எவ்வகையில் முக்கியமானது என நான்கு அம்சங்களினூடாக விளக்குக?

(4+8+12+16= 40 புள்ளிகள்)

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!